**புதுச்சேரி அரசு**
**தொழிலாளர் துறை**

**செய்தி குறிப்பு**

புதுச்சேரி தொழிலாளர் துறையின் வேலை வாய்ப்பகத்தின் சார்பில் உயர் கல்வி கண்காட்சியினை புதுச்சேரி காந்தி திடலில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்து இக் கண்காட்சி வருகின்ற 03.05.2013 முதல் 12.05.2013 வரை நடைபெற உள்ளது. இக்கண்காட்சி மாலை 6.00 மணிமுதல் 9.00 மணி வரை நடைபெறுகின்றது.

இக்கண்காட்சியினை புதுவை முதல் அமைச்சர் மாண்புமிகு திரு. ந. ரங்கசாமி அவர்கள் தொடங்கி வைப்பார்கள். மேலும் மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் திரு. பெ. ராஜவேலு அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் திரு. க. லட்சுமி நாராயணன் , அரசு தலைமை செயலர் திருமதி,ம, சத்தியவதி, மற்றும் அரசுச் செயலர் தொழிலாளர் துறை திரு,பி,ரா, மீனா அவர்களும் இவ்விழாவினில் கலந்து கொள்கிறார்கள்.

மாணவ, மாணவிகள் தங்கள் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு மேற்கொண்டு தொடர வேண்டிய தகுந்த உயர் கல்வி மற்றும் கல்வி நிறுவனங்களை தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டுதலை அளிப்பதே இக்கண்காட்சியின் முக்கிய நோக்கமாகும். புதுச்சேரியிலிருந்தும் மற்றும் அண்டை மாநிலமான தமிழ்நாட்டிலிருந்தும் 40க்கும் மேற்பட்ட மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் முறை நிறுவனங்கள் இக்கண்காட்சியின் வாயிலாக ஒரே கூரையின் கீழ் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. புதுவையிலும் மற்றும் பிற மாநிலங்களிலும் உள்ள பல்வேறு மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், பாலிடெக்னிக், ஐ.டி.ஐ. நர்சிங், ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்களில் உள்ள பாடப் பிரிவுகளைப் பற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்ச்சியை இக்கண்காட்சி ஏற்படுத்தும்.

இதன்மூலம் நேரடியாக கல்லூரிக்குச் சென்று தகவல்களை பெறும் சிரமத்தை பெற்றோர்களும், மாணவர்களும் தவிர்க்கலாம். மேலும் இதன் வாயிலாக மாணவர்கள் திறன் வாய்ந்த உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயன் பெறலாம்.

இக்கண்காட்சி நடைபெறும். அந்நாட்களில் திறன்வாய்ந்த கல்வியாளர்கள், வல்லுனர்களின் தொழில் முறை வழிகாட்டுதல் மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எஸ்.எஸ்.எல்.சி / +2 மாணவ, மாணவிகள் இக்கண்காட்சியில் கலந்துகொண்டு தங்கள் எதிர்கால உயர்கல்வியை தேர்வு செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

G. ஸ்ரீநிவாஸ்
இயக்குநர்.
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி &
தொழிலாளர் துறை ஆணையர்